கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு 2011/2012

**PHY/S 2202 மெய்யியலாளர்களின் வாதங்கள் I**

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதாவது இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஒரு வினாவிற்கும் எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. " இயற்கை பற்றிய தேடலே ஆதிகிரேக்ககாலத்தில் மெய்யியலில் முதன்மை பெற்றிருந்தது "

மேற்படி கூற்றினை:

அ) பிரபஞ்சத்தின் மூலம் தொடர்பான சிந்தனைகள் ( 15 புள்ளிகள் )

ஆ) வானசோதிகள் தொடர்பான சிந்தனைகள் ( 15 புள்ளிகள் )

என்பவற்றின் பின்னணியில் விளக்குக.

2. " மத்தியாகாலம் மெய்யியல் வரலாற்றில் ஓர் இருண்டகாலமென வருணிக்கப்படுகின்றது "

அ) இயற்கையில் இறைவன் தொர்பான அகஸ்ரின் மற்றும் அன்சலம் ஆகியோரின் கருத்துக்களை சுருக்கமாக தெளிவுபடுத்துக. ( 15 புள்ளிகள் )

ஆ) புனித தோமஸ் அக்குவைன்சின் கடவுள் இருப்பு தொடர்பாக அவர் முன்வைக்கும் வாதங்களை சுருக்கமாக விளக்குக. ( 15 புள்ளிகள் )

3. " அறிவு ரீதியான சிந்தனைப்புலங்கள் தோற்றம் பெற்றகாலம் நவீனகாலமாகும் "

அ) டேக்காட்டின் அறிவுமுதல்வாதம் ( 15 புள்ளிகள் )

ஆ) லொக்கின் அனுபவமுதல்வாதமும், உடன்பிறந்த எண்ணங்களை அவர் எவ்வாறு மறுக்கின்றார் என்பதனையும் சுருக்கமாக விளக்குக. ( 15 புள்ளிகள் )

# பகுதி II

4 " அறிவியல்கள் அனைத்திற்கும் தந்தை எனப் புகழப்படுபவர் அரிஸ்ரோட்டில் ", இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. ( 40 புள்ளிகள் )

5 "அறிவியல் சார்ந்த தத்துவ சிந்தனைகள் தோற்றம் பெற்ற காலமாக நவீனகாலம் மெய்யியல் வரலாற்றில் அடையாளப்படுத்தப்பட்ட போதும் அது மத்தியகால சமய சிந்தனைகளின் ஆதிக்கத்திலிருந்து முற்று முழுதாக விடுபடவில்லை" இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? உமது மனப்பதிவினை தக்க ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக. ( 40 புள்ளிகள் )